

இயற்றியவர் :
பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்

## துர்க்கேஸ்வரம்

# தல புராணம்

வெளியீடு : துர்க்கேஸ்வரம் தேவஸ்தானம்
30 Carnforth Road
Toronto, ON. M4A 2K7 Tel : 416-759 9648
www.durka.com

உ

சிவமயம்

இணுவைப் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்

இயற்றிய

# துர்க்கேஸ்வரம்

# தல புராணம்

வெளியீடு

சமய வளர்ச்சிப் பிரிவு
துர்க்கேஸ்வரம் பதிப்பகம்
ரொறன்ரோ - கனடா
416-751 5151

முதற்பதிப்பு
2009

# Thurkeswaram Thala Puranam

***by Pandithar Sa.Ve.Panchadcharam***


| | | |
|---|---|---|
| நூல் | : | துர்க்கேஸ்வரம் தல புராணம் |
| ஆக்கியோன் | : | பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு 2009 |
| அச்சு உரு | : | கவிதா சிபாதரன் |
| நூல் அமைப்பு | : | கிருஸ்ணா சிவப்பிரகாசம் |
| அச்சகம் | : | விவேகா அச்சகம் |
| வெளியீடு | : | துர்க்கேஸ்வரம் பதிப்பகம் |



| | | |
|---|---|---|
| பதிப்புரிமை | : | வெளியீட்டாளருக்கே உரியது. |

# வெளியீட்டுரை

ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களில் பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் பலராலும் அறியப்பட்டவர். தனது ஆசிரியப் பணிமூலம் தலைசிறந்த பல மாணக்கர்களை உருவாக்கியது மட்டுமன்றி, கடமை உணர்வுடைய ஆசிரியரெனப் பலராலும் போற்றப்பட்டவர். கவிதை நூல்கள், சிறுகதைத் தொகுப்புக்கள், சமய நூல்கள், தல புராணங்கள், இலக்கிய நூல்கள், நாடக நூல்கள், இலக்கண நூல்கள் எனப் பல்தரப்பட்ட ஆக்கங்களை இவர் உருவாக்கியுள்ளார். ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியது மட்டுமன்றி, சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற "எழிலி" என்னும் காவியத்தை எழுதியவர் இவராவர்.

துர்க்கேஸ்வரம் ஆலயத்தின் பக்தராகிய இவர் "கனடா துர்க்கேசுவரம் துர்க்கை வெண்பா" என்னும் நூலை எழுதியதுடன், அம்பாளின் தல புராணத்தை எழுத விருப்பம் கொண்டார். துர்க்கேஸ்வரம் அம்பாளின் சிறப்பினை எழுதுவதென்றால் பல்லாயிரம் பக்கங்களும் போதாது. எனினும், சுருக்கமாக அதை எழுத எண்ணம் கொண்டமை, அம்பாளின் மேல் அவர் கொண்ட பெரும் பக்தியை புலப்படுத்துகிறது

இந்நூலை அச்சிட்டு வெளியிடுவதில் துர்க்கேஸ்வரம் சமய வளர்ச்சிப்பிரிவு மகிழ்ச்சியடைகின்றது. இச்சிறந்த நூலை யாத்தமைக்கு இணுவைப் பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் அவர்களுக்கு எம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவரின் தமிழ்ப்பணியும் சமயப்பணியும் மென்மேலும் சிறக்க அம்பாளின் அருளினை வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

*சமயவளர்ச்சிப் பிரிவு*
*துர்க்கேஸ்வரம் பதிப்பகம்*
*416-751 5151*

# ஆசியுரை

திரு.ச.வே.பஞ்சாட்சரம் அவர்கள் சகல செல்வங்களும் பெற்று, நிறைந்த வாழ்வுடன், நம் தமிழ்மொழிக்கும், சைவசமயத்துக்கும் பெருந்தொண்டாற்றி புகழுற்று வாழ துர்க்கேஸ்வரம் அன்னை ஸ்ரீதுர்க்காதேவியைப் பணிந்து ஆசிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

**சிவத்திரு. தியாகராஜ கணேஸ்சுவாமிகள்**
**கனடா இந்துமத பீடாதிபதி**

# Thurkeswaram's founder speaks:

**Sivasri. Thiagarajahkurukkal Kanaswami**
***(Excerpt from www.durka.com)***

## My mission towards Globalization of Hinduism

The very important message I received from my early age studies has always been guiding me towards a specific way of life.

> "Do your duty properly. When you do that duty, never bother about anything except constructive criticism. Neglect the haunting of evilness from selfish people. Doing a right thing always earns many criticisms. Remember! There are people who will appreciate your good services. There are people who will give a hand for your good services. Beyond all of them, the God is there"

That is the message from my Gurus - a valuable message. In each stage of my life, I have come across many instances which remind me of this message. I never give up. I never hesitate to do the right thing. I have a mission. I always go towards that mission. It is determined, not by me but by God.

I am from a Brahmin family. When I say 'Brahmin', a caste is not mentioned here, but a way of life. I am not a rich person. My father, Thiagarajahkurukkal was a priest in a small temple in Sri Lanka. My Mother, Sunthara Amma, origin from South India, always stressed me not to go for any job other than Hindu Priest. I had my Priesthood studies in *Thiruketheeswaram, Nallur and South India* . Being a Priest and living as a Priest with all the relevant disciplines brings a total complacency. Being a priest in many temples in Sri Lanka and Malaysia, I have the satisfaction that I have done my duties properly.

When I landed in Canada, I realized that I have a specific task. There has been a thrust within me to keep on pushing towards that assignment. Whenever I stepped back from that assignment due to my family burden, an invisible force never let me to withdraw from that task.

"The need of a Hindu temple to propel the blessings of the almighty Goddess Sridurka and The need of a Hindu organization to foster the cultural values among the Hindu generation in North America."

When I launched the holy task of building a temple in Canada, I never expected that many obstacles. I always thought of only one thing.

"I didn't do anything wrong! Why are these people against me?"

Some people did not want a man from a Brahmin family to be a founder of a temple in Canada. I still don't understand why a priest cannot be a founder of a temple.

"Do I need to face all these hassles?"

The invisible force around me never let me to step back. Within a couple of years, those who opposed and obstructed the arrival of Goddess Durga in Canada suffered a lot and were cursed by the almighty power.

FINALLY, THE TORONTO SRIDUKA HINDU TEMPLE HAD EMERGED.

On July 2, 2001, the great inauguration and consecration ceremony was performed with 33 Homa best preferred rituals by more than 50 Hindu priests from all over the world. Many people say that I am the person behind this great ceremony. But, I am not! It is SHE, the almighty goddess Sridurka. She brought all the necessary sources to have this great ceremony happen in her abode.

My task is not over yet. There are many things to do. The temple is not complete ... The Raja Gopuram project is still due.
Above all of them, our major task is to generate global awareness of spirituality and teachings of Hinduism. We all have to join together for the well being of people ... for the peace in the world.

My journey continues....

# பொருளடக்கம்

காப்பு 07

கடவுள் வாழ்த்து 08

நாட்டுப் படலம் 11

நகரப் படலம் 14

உற்பத்திப் படலம் 17

தலப் படலம் 20

உற்சவப் படலம் 23

அற்புதப் படலம் 26

ஆற்றுப் படலம் 29

நூற்பயன் 31

உ
சிவமயம்

இணுவைப் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்
இயற்றிய

# துர்க்கேஸ்வரம்

# தல புராணம்

## காப்பு

உனதுதளி முன்பாக ஓங்கார வேழா
தனதுதளி மேல்தலபு ராணம் - புனையப்
பணித்திட்டாள் துர்க்கை! பணிதலைமேற்கொண்டேன்!
மணிப்பா வளம்தா மகிழ்ந்து - உணக்கும்
என்துய ரும்தீர்!இழுத்தாள் தமிழினத்தை!
நின்மயமாய்,நீசப்பழவினை-கொன்றொழித்து
தாழ்வெல்லாம் நீங்கித் தலைநிமிர்ந்து தாயகத்தும்
வாழ்வெய்து விப்பாய் வலிந்து!

# கடவுள் வாழ்த்து

❶. விநாயகர்

*அணிந்து பிச்சி துர்க்கை*
*அம்மன் அமர்ந்தருளும்*
*மணங்கமழும் துர்க்கேஸ்*
*வரம் கனடாக் கோவிலிலே*
*வணங்க,வணங்கஇடர்*
*வல்வினைகள் வேரறுக்கும்*
*கணங்களுக்கு நாதன்*
*கழலடிகள் வாழியவே!*

❷. கொற்றவை

*பெற்றவளின் மேலாய்ப்*
*பேணிஎமை வாழ்விக்கும்*
*கொற்றவை நம் குற்றங்*
*குறைகள் பொறுத்தருளும்*
*வற்றாக் கருணை*
*மழைஎங்கள் துர்க்கைதன்*
*பொற்றா மரைத்தாள்கள்*
*போற்றினோம்!வாழியவே!*

❸. சிவபெருமான்

*வல்லபுரம் மூன்றும்*
*மாள எரித்தசிவன்,*
*வல்லியத் தோலாடை,*
*மழகளிற் றுரிப்போர்வை*
*புல்லுசிவன், கொன்றைப்*
*பூச்சூடி,பாம்பணிவோன்,*
*தில்லை நடமாடி*
*சிவன் தாள்கள் வாழியவே!*

❹. முருகவேள்

கலியுகத்தில் விஞ்சும்
கடுவினை மலைபாற்றும்
வலியகதிர் வேலன்,
வண்டமிழின் காப்பாளன்,
குலவுபடை வீடாறு
குடிகொண்டருள் சேய்,
உலவுமயில் மேலான்
ஒண்கழல்கள் வாழியவே!

❺. திருத்தெய்வம்

குண்டுகளால் நெல்வயல்கள்
கொளுத்தும் போர் வெறியர்
உண்டியில்லை என்றுலகம்
உருக்குலையச் செய்கின்றார்!
சண்டாளர் இவர்நீற்றி,
சாந்திஉல கில்நாட்டி
மண்டுசெல்வம், இன்பம்
வழங்கித்திரு வாழியவே!

❻. கலைத்தெய்வம்

அறவாழ் வளிக்கும்
அனைத்தின்பம் எனும்ஞானம்
பெறவைத் தொவ்வோர்
பித்துமன மானுடனும்,
நெறிதழுவி வாழுமந்த
நெஞ்ச ஈரம் நல்கும்
குறிகொண் டினியேனும்
குளிர்ந்து ஞானமகள் வாழி!

❼. வைரவர்

காசு,புகழ் பலங்களினைக்
கடவுள் களாய்த் துதித்து
நாசம் உறும் முழுமை
நன்றறியா மானுடர்கள்
ஈசனுக்கு முதன்மை தந்தே
ஏத்தவைத்தே,தடிந்தயனைப்
பூசிக்கச் சிவம் செய்த
புகழ்வைர வர்வாழி!

**8. வீரபத்திரன்**

முக்கண்ணன் தேவிதரு
முத்தலைச் சூலியொடு
புக்குவேள் விச்சாலை,
போற்றாது சிவனைச்செய்
தக்கனது வேள்வியினைச்
சாய்த்தகந்தை சாய்த்ததுபோல்
தக்கன்களைச் சாய்த்தின்றும்
வீரபத்திரன்வாழி!

**9. ஐயப்பன்**

பந்தளம்நல் கையப்பன்
பண்டைஐய னார்,தன்பால்
நொந்தறுபது நாட்கள்
நோற்போர்க் கருள்வோன்,
அந்தமலை சபரியிலே
அமர்ந்தற் புதம் செய்வோன்,
குந்தி யமர்ந்தருள்செய்
கோன் ஐயப் பன்வாழி!

**10. மகாமாரி**

மிகாமல் பட்டினிச் சாக்கள்
மேதினியைக் காத்தருளி,
பகாசுரனின் பசிபோல்
பசியார்க்கும் வரல்போக்கி,
அகாலமழை வையத்தை
அழிக்காமல் கார்பொழிய
மகாமாரி எங்களருள்
மழைத்தெய்வம் வாழியவே!

# நாட்டுப்படலம்

❶❶. வடஅமெரிக்கக் கண்ட
வடக்குப் பகுதி தானிந்த
'குடியிருப்பெ'னும் பொருளிலே
கொண்ட பெயர்க்கன டாநாடு!

❶❷. உலகில் இரண்டாம் பெருநிலம்
உடையநாடு கனடாதான்!
நில அகழ் வாய்வு சொல்வது
நீள்இருபத்தா றாயிரம்,

❶❸. வருடங்கள்முன் மானுடன்
வாழ்ந்த சான்றிங் குள்ளதாய்!
இருஇனம்-செவ் விந்தியர்,
இனியூட் தொல் குடிகளாம்!

❶❹. நூற்றாண்டுபதி னாறிலே
நுழைந்தா ரிங்கு பிரெஞ்சியர்!
நூற்றாண்டு பதினெட்டிலே
நுழைந்தார் ஆங்கி லேயரும்!

15. இன்று கனடா இவ்விரு
இனமும் இணைந்த ஆட்சியில்!
இன்று ராச மதங்களோ
கத்தோலிக்கம், புரட்டத்தாந்!

16. ஆங்கிலமும் பிரெஞ்சும்தான்
ஆட்சி மொழிகள்!ஆயினும்
ஈங்கீர் நூறு மொழி குடி
யேறிக் குழுக்கள் பேசுவர்!

17. பல்லினப்பண் பாடுகள்
பல்மதம் பல் மொழிகள் பேண்
நல்லநாடு தமிழரும்
நலமேவாழுங் கனடாதான்!

18. தங்கலைமொழி,கலாசாரம்
தாமுழை தேட்டங்கள்
பங்க மின்றிப் பேணிவாழ்
பல்லினங்களும் களிப்பன!

19. வெள்ளி,செம்பொ டிரும்பு,பொன்
மென்மரக்கா,பண்ணைகள்,
கொள்ளை செல்வம்,தொழில்வகை
குலவு நாடிக் கனடாமண்!

20. தலைநகராக ஒட்டாவா
தன்னைக் கொண்ட கனடாவில்
பலசமயத்துக் கோவில்கள்
பன்னூா றுண்டு நகர்தொறும்!

21\. வெண்பனித்திடல் மயமான
விறைகுளிர் ஆறு திங்களும்!
தண்மழை வெயில்,வெப்பங்கள்
தாங்கரை ஆண்டும் கொள்தேசம்!

22\. அயர வைக்கும் உலகத்தின்
அதிச யங்கள் ஏழிலே
நயக ராவாம் நீர்வீழ்ச்சி
நண்ணுங் கனடா நாட்டிலே!

23\. ஆன மதங்கள், கலை, கல்வி,
அறப்பணிகளை ஊக்கிடும்
மானி யங்கள் வழங்கியும்
மகிழ்வ திந்தக் கனடாமண்!

24\. வாரம் ஈர்மணி நேரம் எம்
மகார் தமிழுங் கற்றிட
ஈர நெஞ்சக் கனடாத்தாய்
ஈகிறாள் குரு சம்பளம்!

25\. இங்கு வாழும் பற்பல
இனத்து மக்கள் தம்மையும்
எங்கள் துர்க்கை அம்மனும்
ஈர்த்துக் கருணை பொழிகிறாள்!

# நகரப்படலம்

26. மாநிலங்கள் பத்தாக,ஒதுக்கீடு மூன்றாக
வகுப்புற்ற கனடாதன்னோர்
மாநிலமாம் ஒன்ராறியோதனது முதன்மைநகர்
வளம் கொஞ்சும் ரொறென்ரோ வேதான்!
ஆனதிந்தப் பெயர்நீரில் மரம்நிற்கும் இடமென்னும்
அர்த்தத்தில் ஆதிநாளில்!
தானமர்ந்திந் நன்னகரின் கிழக்கினிலே எமையாளும்
தாயெங்கள் துர்க்கை அம்மன்!

27. இந்நகரின் கிழக்கெல்லை றூஸ்ஆறு,வடக்கெல்லை
ஸ்ரீல்ஸ்சதுக்கம்,மேற்குப்பக்கம்
மன்னுமெற் றோபிகோ கிறீக்நெடுஞ்சாலை,தென்
மாட்டேரி ஒன்ராறியோ,
டொன்நதியும் ஹம்பர்எனச்சொல்நதியும் இந்நகரைத்
துண்டாடி ஓடுவனவாம்!
இந்நதிகள் கிளைகள்பல இந்நகரந் திரிந்துலவி
எழில் வனங்கள் வளர்த்துநிற்ப!

28. ஐம்பது விழுக்காடு ரொறென்ரோவின் குடிமக்கள்
ஆம்!பிறந்தோர் வெளிநாடென்பர்!
வம்புதும் புக்குறைவால் மாண்சூழற் தூய்மையினால்
வாழ்க்கைத்தர உயர்வு தன்னால்
செம்மையுற வாழ்வையச் சிறந்தநகர் சிலவற்றுள்
சிறந்தவொன்றே ரொறென்ரோ!
ஐம்பது மாடிகொண் டாகாயம் அளப்ப இங்
கமை வரிசை மாளிகைகள்!

❷❾. கனடாவின் நகர்களில் மிகஅதிகம் மக்கள்வாழ்
கவின்நகர் ரொறென்ரோவேதான்!
எனில்,நாட்டின் சனத்தொகையில் மூன்றிலொருபங்கினர்
இங்குதான் வாழுகின்றார்!
இனங்கள் இருநூறுவரை இங்குவர நுழைவாயில்
இந்தநகர் ரொறென்ரோவேதான்!
தனிமனித சுதந்திரம் தக்கபடி பேணுவதில்
தலைசிறந்த நகர்ரொறென்ரோ!

❸⓿. பெருந்தொகையர் ரொறென்ரோவில் பேசுமொழி ஆங்கிலம்!
பிறமொழிகள் பிரெஞ்சு சீனம்
கரும்பான தமிழ்,ஸ்பானிஷ் போர்த்துக்கே யம்,இந்தி,
கவின் பஞ்சாபி,உருது!
பெருமளவில் இத்தாலி,பிறநூற்றுக் கணக்கான
பேச்சுமொழிகள் ஒலிக்கும்!
மருவிமெலத் தமிழிங்கு மறையாமற் காத்தருள
மனங்கொள்ள வேண்டும் துர்க்கை!

❸❶. எவ்வாறு கடுங்குளிரை எதிர்கொண்டு வாழ்வதென
ஏற்றவழி முறைகள் தந்தார்
செவ்விந்தியர் இனியூட் எனுங்கனடாத் தொல்குடிகள்!
திரண்டு புகு பிரெஞ்சியர்கள்
இவ்வாறே பிரெஞ்சுமொழி, கத்தோலிக் கம்எனப்பல
எழில்தந்தார்!ஆங்கிலேயர்
ஒவ்வாட்சிமுறை,சட்டம்,நீதி,வாக்குரிமை இவை
உதவிட்டார் இந்நகர்க்கும்!

❸❷. உலகின் இரண்டாவததி உயரக் கோபுரமிங்கே
ஒளிரும் சீ.என்.கோபுரம்!
உலகின்ஐந் தாவதுமிகப்பெரிய சந்தைஇங்
குள்ளகண் காட்சிக்கூடம்!
தலைமை,உயிரியல்மருத்து வஆய்வில் உலகிலே
தாங்காய்வுக் கழகம்இங்கே!
உலகில்அதி சந்தடிகொள் சாலைகளில் ஒன்றிதன்
நான்குசுழி ஒன்றுச்சாலை!

33. முன்னை ரொறென்ரோவெனும் முதுநகர் டவுண் ரவுண்
முகில்முட்டும் மனைகள் தம்மில்
மின்னுமர சாட்சிமையம் றோயல்வங்கி முதலான
விளங்குபணி மனைகள் ஆர்ப்ப!
சின்னயாழ்ப் பாணமெனச் செப்புறும் விதம்தமிழர்
செறிந்துவாழ் இந்நகரிலே
துன்னுபல பிறநாட்டவர்குறிச்சிகள் அமை
சுற்றாடல் பலவுமுண்டு!

34. இருபத்தைந் திலுமதிகம் இந்துத்தளி கள்இங்கும்
இயங்குவது துர்க்கையருளே!
விருந்துமண்டபம் பதி னைந்துவரை தமிழர்தம்
மிளிர்தமிழ்ச் சொத்தாயுண்டு!
மருத்துவர்கள்,வர்த்தகர்கள்,தொழிலதிபர்,தொழில்நுட்ப
வல்லுநர்,வக்கீல்களாய்,
பெரும்நடன,இசை,வேத,நாடகக் கலைஞராய்
எழுந்துள்ளார் தமிழர்பலபேர்!

35. ரொறென்ரோவின் மக்கட்கு குறிப்பாகத் தாய்மண்ணைத்
துறந்தழும் தமிழருக்கு
அறந்திகழ்,மறந்திகழ் அன்னைதுணை வந்தமர்ந்தே
ஆறுதல் அருளுகின்றாள்!
சிறந்த அறத்தெய்வீகச் சிந்தைஇத் தேசத்தில்
செறிக தமிழ்நெஞ்சமெல்லாம்!
நிறம்பலவும் தாங்கன்னை நிறம்பலகொள் இனங்களையும்
நிம்மதிதந் தாளுகின்றாள்!

# உற்பத்திப்படலம்

36. பலவா யிரம்ஆண் டுகள்முன்பு
    பாரின் பலபாகங் களிலும்
நிலவிய மனிதநா கரிகங்கள்
    நிலஅகழ் வாய்வில் வெளிவருவ!
தலைமைசால் இற்றை அமெரிக்கா
    தனில்சிவ வழிபா டிருந்ததுவாம்!
அலையெழுங் கால வெள்ளத்தால்
    ஆயிரம் மாற்றங்கள் நிகழ்ந்துளவாம்!

37. அண்மையில் நிகழ்ந்த ஒருமாற்றம்
    அகதித் தமிழன் புலப்பெயர்வு!
கண்டம் பலவும் பெயர்ந்தேறிக்
    கலங்கும் தமிழன் தன்னோடு
கொண்டுவந்தான் தமிழ்,சைவம்,
    கூர்த்த தமிழ்ப்பண் பாடுகளும்!
பண்டை இந்து மதப்பரம்பல்
    பாரில் மீண்டும் நிகழ்கிறது!

38. வடஅமெரிக்கக் கனடாவில்
    வந்து வந்து குடியேறிக்
கடந்த இருபத்தைந் தாண்டில்
    கடவுள் இந்துக் கோவில்கள்,
நடன, இசை, தமிழ் வகுப்புக்கள்
    நாட்டித் தமிழர் நிமிர்கின்றார்!
தொடங்கிய இரண்டாம் கோயிலிங்கு
    துர்க்கை அம்மன் திருத்தளியே!

39. இலங்கை இந்து மதபீட
இணையில் தலைவர் எனும்புகழார்
நலந்திகழ் கைலாச நாதர்தம்
நன்மா ணாக்கர் கணேசசாமி
பலதளி குடமுழுக் காட்டியவர்
பைந்தமிழ், சைவம் கனடாவில்
நிலைநிறுத் தெண்ணங்கொளுமாறு
நினைத்தாள் துர்க்கைப் பேரன்னை!

40. அன்னார் அயரா உழைப்பாலே
ஆண்டு தொண்ணூற் றிரண்டினில் மார்ச்
நன்னாள் இருபத்திரண்டினிலே
நாயகி துர்க்கை கோவிலொன்று
துன்னிப் பக்தர் சூழ்ந்தேத்த
தொடங்கப் பட்டது மார்க்கம் தெரு
தன்னில்! கணேச சாமிகளே
சால்புறக் கோவில் நடத்தி வந்தார்!

41. பூசை,விழாக்கள் புனிதத்தால்
பொலிந்த துர்க்கை திருவடியில்
பாசம் மேவும் அடியார்கள்
பல்லா யிரமாய்ப் பெருகிவர,
காசி,காஞ்சி, மதுரைபோல்
கவினார் கோவில் இக்கனடா
தேசத்திலும் தான் எடுத்துறையத்
தேவி திருவுளங் கொண்டெழுந்தாள்!

42 அறிந்த குருக்கள் மகிழ்வெய்தி
அடியர் எளிதில் அணுக ஏற்ற
ரொறன்ரோ நகரின் சிறந்த இடம்
ஒன்றைத் தெரிந்து தளி செய்தார்!
சிறந்த தொண்ணூற்று நான்கெய்தும்
திங்கள் ஆவணி பத்தொன்பதில்
புறப்பட் டூர்வல மாய்வந்து
புகுந்தாள் துர்க்கை புதுக்கோவில்!

43. நன்கே அமைபாற் கோவில் மறு
நாளே கணேச சாமிகளே
வென்றிச் செல்வியைக் கொலுவிருத்தி
விதிப்படி பூசைகள் புரிந்து வந்தார்!
குன்றில் விளக்காய்த் துர்க்கையருள்
குலவிற் றிங்கிந்து நெஞ்செல்லாம்!
துன்றினர் அடியர், தொண்டர்கள்
தூரத் திடங்களிலிருந்து வந்தும்!

44. தொடர்ந்தீ ராண்டுச் சுழற்சியிலே
தொண்ணூற் றாறா வணிமாதம்
அடைந்த பத்தொன்ப தாம் நாளில்
ஆயிரத் தெட்டுச் சங்குநாட்டி
அடிக்கல் துர்க்கையை உறைவிக்கும்
ஆலயத் துக்கு நிறுவுண்டது!
மிடுக்காய் வளர்ந்தே ஐந்தாண்டில்
மேவிற்று முழுமை தாய்வீடு!

45. இந்தியா, மலேசியா, அமெரிக்கா,
இலங்கை,கனடா நாடுகளின்
இந்து சமய நிறுவனங்கள்
ஏத்தி வாழ்த்தி ஆசிதர,
வந்துபன் னாட்டுக் குருமார்கள்
வழங்கக் கிரியை குடமுழுக்கை
சுந்தரி இராண்டா யிரத்தொன்றின்
சுடரா னியிலே மேவிட்டாள்!

# தலப்படலம்

46. றொறென்ரோவில் லோறன்சு விக்ரோறி யாபார்க்
ஒண்பகுதிக் காண்போத்தாம் சாலைமருங் காக
சிறந்தபல கட்டடங்கள் திகழஇரு பக்கம்
தேவி துர்க்கை திருகோவில் அமைந்துளது காணீர்!
அறங்காவற் சபைத்தலைவர் பிரதமகுருக்கள்
அருட்கணேச சாமிகளின் தூயநடத் துகையில்
திறம்பாத அருள் வளத்தில் திகழும்துர்க்கேஸ் வரமே
தெய்வஒளி மெருகேறி வளர்ந்துவரும் தலமே!

47. அந்நாள்தொட் டின்றுவரை ஈழம்,தமிழகத்தின்
ஆலயங்கள் தமிழ்க்கலைகள் வளருமிட மாவ!
இந்நாட்டில் எழுந்துள்ள திருக்கோவில் தாமும்
இறைபணி யோடிப்பணிகள்இயற்றிவரு வனவே!
அன்னை துர்க்கை இத்தளியும் அனைத்துவிழாக்களிலும்
ஆடல்,பிரசங்கம்,தவில் நாதஸ்வரத் தோடும்
இன்னிசைக்கச் சேரிகளும்,இலக்கியப்பல் விருந்தும்
ஏராளம் அடியர் துய்க்க இடம்பெற்று வருவ!

48. தமிழிசையின் பண்களிலே அமைந்ததிரு முறைகள்
தமில்நன்கு சிட்சைபெற்ற ஓதுவார் தம்மை
தமிழ்நாட்டிலிருந்து சிறப்பாக வருவித்துத்
தாய்துர்க்கை மகோற்ஸவ காலம்நாள் தோறும்
அமிழ்தெனவே பஞ்சபுராணம் பாடுவித்தும்
ஆனந்தச் சிலிர்ப்பூட்டும் ஆலயமி திங்கா
கம வேத மந்திரமும் நாதஅலை மோதும்!
களிபசனை செய்வர்பக்தர் துர்க்கைகொளப்பவணி!

49. ஆலயத்தின் உள்வீதிச் சுவரமைந்த மாடம்
அறுபத்து மூன்றினிலும் ஐம்பொன்னா லான
சீலஒளி நாயன்மார் அறுபத்து மூவர்
திருவுருவச் சிலைவரிசை கண்கொள்ளாக்காட்சி!
கோலமுற ஆனைமுகன்,துர்க்கை,சுடர் வேலன்
கொள்பவனி தனிலேறும் எலி,சிங்கம்,மஞ்ஞை
போலும் திரு வாகனங்கள் திகழ்வதன்னை கோவில்!
புராணஎழிற்காட்சிபல பூணுங்கலைக் கோவில்!

50. நவகோள்கள் உறைகின்ற நவக்கிரகக் கோட்டம்
நாள்தோறும்சிறப்பாகச் செவ்வாய்கள் தோறும்
பவவினைகள்,பிணி,தோசங்கெடல்வேண்டி எரிப்பர்
பலசுட்டி,எலுமிச்சங் கோதில் நெய் விளக்கு!
தவில்,நாத சுரஇசையின்,மணிகள்ஒலி தம்மின்
சதுர்வேத,தமிழ்வேதஇசைப்பாட்டின் குழைவில்
சிலைதுர்க்கை பூசைநிகழ்ந்தேறும்!அடியார்கள்
சிந்தைகளில் கண்களிலே தேனாறு பாயும்!

51. பளபளப்பு,பரிசுத்தம்,பக்குவம்சால் கோவில்!
பணிந்துதலை குனிந்து கரம் கூப்பிப்பண் ணிசைத்து
விழிததும்ப மெய்சிலிர்த்து வலம்வரும்மெய் யடியர்!
வேளைதவறாதாறு வேளைபூசை செய்து
தொழுபவர்கள் சாந்திபெறத் தூண்டும் பூசகர்கள்
துர்க்கைதிருப் பவனிகொளத் தோள்மீது சுமந்து
செழுந்தீபம்,குடைதூபம்,சாமரை,ஆல் வட்டம்
சிவசின்னம் இவையேந்திப்பணிசெய்யும் தொண்டர்!

52. இயல்என்னும் இலக்கியத்தின் நிகழ்ச்சிகளும்ஒருநாள்
இசை என்னும் நுண்கலையின் நிகழ்ச்சிகளும் ஒருநாள்
மயங்குமெழில் நாட்டியத்தின் நிகழ்ச்சிகளும் ஒருநாள்,
வளம்பெறவே ஆடித்திரு விழாக்காலம்வைத்து,
நயம்பொதுளு முத்தமிழ்இந் நாட்டினிலும் ஓம்பும்
நாரணியின் பேரருளைநாடுதொழ வேண்டும்
இயற்புலவன்கிருஷ்ணாசெய் ஊஞ்சற் பா இசையில்
இனிதாடும் தாய்துர்க்கேஸ்வரம்மேவும்துர்க்கை!

53. கனடாவாழ் இந்துக்கள் களித்துதவி நிற்க,
கருங்கல்லில் பொளிசிற்பம் கனிகுலுங்க ஓங்கி,
இனிதேவான் நிமிர் ராச கோபுரத்தின் தோற்றம்
எங்கெல்லாம் தெரிந்தெம்கை கூப்புவிப்பதம்மா!
பனி,வெண்ணெய்த் திண்ணையெனப் படிந்தகுளிர் நாளும்
பத்திச்சந்நதங்கொண்டுபத்த ரடைகோவில்,
இனிதுவிரிமுற்றம்,பின்பெரியதளம் கொண்டே
இம்மண்ணை ஆட்சிபுரி துர்க்கை அம்மன் கோவில்!

54. தமிழ்நாட்டண் ணாமலைப்பல்கலைக்கழகம் நடத்தும்
சால்கனடாக் கிளைவிளங்கும் விரிவுரையாளர்கள்
உமைதுர்க்கை திருக்கோவில்தேர்,தீர்த்தநாட்கள்
உன்னதமாய் நடத்துமிசைப் பெருவேள்விதன்னில்
இமையவரும் நிச்சயமாய் இறங்கிவந்து சபையில்
இருந்துதாள மிட்டுத்தலை ஆட்டி ரசித் திடுவார்!
எமதீழம் தனைப்பிரிந்த துயரெல்லாம் மறந்தே
ஈழத்தில் இருக்கின்ற தாக மனம்துள்ளும்!

55. முப்பத்து மூன்றோமகுண்டங்கள் அமைத்து,
முறையாக முதன்முதலில் நிகழ்ந்தகுட முழுக்கில்
முப்போதும் முழுமுதலின் திருமேனி தீண்டும்
முப்புரிநூல் அந்தணர்கள் யாகத்திற் கலந்தார்!
அப்பெரிய யாகத்தின் ஆனந்தம் என்னே!
அவனிமிசை இதுபோல அளப்பரிய விழவுளதோ!
செப்பரிய திருப்பணிகள் செய்வதனால் தேவர்களும்
திருவருளாய் பொழிந்து நிற்கும் திருக்கோவில்!

# உற்சவப்படலம்

56. ஆடியினில் பூர நன்னாள்அன்னை தீர்த்தம்
ஆடும் நாள்! அந்நாளை ஈறாய்க்கொண்டு,
சூடுகொடியேற்றம்தொடர் இருபத்தைந்து
சுடர்நாட்கள் திருவிழா நிகழும்!அங்கு
கூடடியர் தோளில் வலம் வருவாள் அன்னை!
கொண்டாட்டமாய் விழாக்கள் நிகழும்!பக்தர்
பாடிவருவார் பசனை அம்பாள் பின்னே!
பம்பிவரும் நாதசுரம், மேளம் முன்னே!

57. சப்பறத்தில் வெளிவீதி ஊர்வாள் ஓர்நாள்!
சால்மஞ்சம் மிசைபவனி கொள்வாள் ஓர்நாள்!
முப்பெரிய தேர்களிலே முதல் தேர் ஆனை
முகன்,நடுவில் தேரில்தான்,பின்னே வேலன்,
இப்படியே தேர்நாளில் பவனி கொள்வாள்!
இந்நாள்கள் அடியரன்ன தானம் துய்ப்பார்!
எப்பக்கம் பார்த்தாலும் அடியர் கூட்டம்
எழில்துர்க்கேஸ் வரம்கோவில் தேர்,தீர்த்தத்தில்!

58. வீறரிமேல் கொற்றவையாம் மூலமூர்த்தி
வேறுபல பரிவார மூர்த்தம் தாமும்
ஆறு நேரம் அடியவரின் கண்களிப்ப
ஆகமஞ்சால் விதிப்பூசை கொள்ளு வர்!நாள்
தோறும்அதி காலை எட்டரைம ணிக்குச்
சுடர்க்கோவில் திறந்திரவொன்பதுக்கு மூடும்!
ஏறியும்உந் துகள், நடந்தும் பக்தி கூர்க்க
எய்திவழி படுகின்றார் ஏராளம் பேர்!

59. சித்திரைத் தமிழ்ப்புத்தாண்டில் நிறைவை நண்ணும்
சித்திவிநாயகர் விழாக்கள் பத்து நாட்கள்!
அத்திங்கள் வைகாசி அமைவிசாகம் தீர்த்தம்
ஆடும்விதம் முருகனுக்குப் பத்தேநாட்கள்,
இத்தளியில் அலங்காரத் திருவிழாக்கள்
எவ்வாண்டும் நிகழ்ந்திடுவ! நவரா தம்மில்
பத்திரவு மணங்கமழும் திருவிழாக்கள்
பாடி அன்னை புகழ் முழங்கும் கலைகள் ஆர்ப்பு!

60. ஐப்பசியில் ஆறுதினம் கந்தர்சட்டி,
அணைகார்த்தி கைஇருபத்தொருநாள் ஐந்து
கைப்பெருமான் தன்சட்டி! மார்க கழிக்கண்
கங்கைபிறைச் சடையான்தன் திருவெம் பாவை
இப்படியே கௌரிநோன்பும் இருபத் தோர்நாள்
இங்கினிதாய் நிகழ்ந்தான்ம மேன்மை சேர்க்கும்!
ஒப்பவே செவ் வாய்களிலே ராகுகால
ஒளிப்பூசை ஒழுங்குறவே நிகழ்வதிங்கு!

61. தைத்திங்கட் பிறப்பின் கதிர் பொங்கல் நன்னாள்,
சால்மாசிமகம்,சிவன்ராத் திரியும்,மேலும்
மைத்தடங்கண் உமைசிவனின் மணநாளாக
வரும் திங்கள் பங்குனிஉத் தரநன்னாள்,அச்
சித்திரை தமிழ்ப்புத்தாண்டு, சித்திரை யாம்நாள்
சேயோன் சார் வைகாசி விசாகம், ஆனி
உத்தரநாள் மஞ்சனம்,தரி சனத்தி னோடும்
உமைபூப்பை அடை ஆடிப் பூரநாளும்,

62. ஆவணிமூலம், ஓணம் தாமும்,மோட்ச
அர்ச்சனையும், வடுகர்மகாபரணி நாளும்,
மேவுகார்த்தி கைமாதக் கார்த்திகையும்,
விமரிசையாய்க் கொண்டாடப் படுமிங்கேதான்!
பூவினொடு பொட்டோம்பல் விழையும் மாதர்
போற்றுவர லட்சுமிதன் விரத நாளில்
தேவிதிருத் தளியில் திருவிளக்குப் பூசை
செய்கின்ற எழில்கள்கண் கொள்ளாக்காட்சி!

❻❸. மாதாந்த நோன்புகளாம் சதுர்த்தி,சட்டி
மற்றும் பிர தோசம் அமாவாசை யோடு
மாதாவுக் காம் விரதப் பூர ணைக்கண்
வழிபாடு, பூசைகளும், சிறப்பாய் மேவும்!
தீதான கிரகநிலைத் தாக்கம் தீர்க்கச்
சிறப்பான பூசைகள்,கண்,நாவின் ஊறு
யாதாயி னும்தீர்க்க ஓமம், சாந்தி
அவ்வழிபா டுகள்நாளும் ஆற்றச் சிங்கம்
மீதூரும் கொற்றவையின் கோவிலிங்கு
வேண்டியஏற் பாடுகளும் நிறைவாயுண்டு!

❻❹. ஆடிவரு செவ்வாய்கள் தோறும்,மேலும்
ஆவணியின் ஞாயிற்றுக் கிழமை தோறும்,
கூடுபுரட் டாதிவரு சனிகள் தோறும்,
கொடியகுளிர்ப் பங்குனியின்திங்கள் தோறும்,
பீடைகெட ஐப்பசியின் வெள்ளி தோறும்,
பின்னர்வரும் கார்த்திகையின்திங்கள் தோறும்,
ஓடியலை மனமடக்கிப் புரியும் நோன்பும்,
ஓங்குவிக்கும் பூசனைகள் தாமும் உண்டு!

❻❺. தலம்துர்க்கேஸ் வரம்சபரி மலைஐ யப்பன்
தன்விழாவும் ஆண்டுதொறும் காண்ப துண்டு!
இலங்கையுள தாயூரிற் குலதெய் வங்கள்
ஏத்த அங்கு திருவிழாக்கள் நடக்கும் போது,
புலம்பெயர்ந்திங் குறைவோர்தம் ஏக்கம்போக்கப்
புகுந்தம்மூர்த் திகளுக்கிங் குளகோ வில்கள்
நலந்திகழ விழாச்செய்வர்! இங்கே யுந்தான்
நாடியந்த விழாபலவும் நடத்து கின்றார்!

# அற்புதப்படலம்

❻❻.

நவசக்தி நாயகியாள் நல்கியஅப் புதுநிலத்தில்
புதிய கோவில்
கவனத்தோ டெழும்பிற்று! கனடாவில் முதன்முதலாய்க்
காட்சிதந்து
பவனியினைப் பெருந்தெருவில் பகிரங்க மாய்அடியர்
சூழக்கண்டாள்!
இவையெல்லாம்கனடாவின் இந்துக்கள் நெஞ்சினிக்கும்
அற்புதங்கள்!

❻❼.

நாடுபல பயணித்து நண்ணியிங்குகுடியமர்ந்த
கணேச சாமி
கூடுதிரு மணங்கள்முதல்குடிபுகுதல், சாந்திகள்செய்
பணிகள் மூலம்
தேடுபணத் தோடளவாய்ச்சீவிப்போம் என்றெண்ணி
இருந்தவேளை
வாடியிங்கு வருமீழ மக்கள்மனம் தான்தேற்ற
மனைதாய் கேட்டாள்!

❻❽.

சரியென்று மார்க்கம்செல் சாலைமரு வோர்மனையில்
தளிவைத்தார்கள்!
இருவருட காலத்தில் இடத்தைவிடு எனஇடித்த
உரிமை யாளன்
புரிவழக்குப் பலதவணை போகவைத் ததற்குள்ளே
துர்க்கைஅன்னை
அரிதாய் இன்றுஅமைகோவில் அணிவளவு தந்தாள்,அற்
புதமே செய்தாள்!

69.

கற்பகமாய்க் கொலுவிருந்து காரானாய்த் திரிந்துலவிக்
கனடா வார்க்கு
நற்கருணை புரிகின்ற நாரணிநம் துர்க்கை யருள்
நவிலற் பாற்றோ?
அற்புதங்கள் எத்தனையை ஆண்டுசில வற்றுள்ளே
அன்னை செய்தாள்!
பற்பலராம் அடியர்கள் பகர்கின்ற அனுபவங்கள்
பரவ சந்தான்!

70.

"நாடுவிட்டு நாடுவந்தும் நரித்தனங்கள் குறையாத
நஞ்சர் தம்மின்
கேடுபுரி சதிநின்று,கிட்டவந்து காத்திடென்று
கேட்டுப் பெற்றோம்
பீடுறுநிம் மதிதுர்க்கைபேரருளால்!" என்றுபலர்!
பெருவியப்பாய்
"நாடுவதி குடியுரிமை நண்ணுவித்தாள் துர்க்கை"யென
நயப்பார் பல்லோர்!

71.

"பிள்ளைவரம் எனக்கீந்தாள்!" "பிணிகுழந்தைக்கொழித்தாள்"
"பெற்றோம் வேலை!"
"கொள்ளவைத்தாள் மாங்கலியம்!" "கூடவைத்தாள்பிரிந்தஎமை"
"குடித்தல் தேய்த்தாள்!"
"உள்ளன்பே அற்றவராய் உடனிருந்து கழுத்தறுப் போர்
உறவொழித்தாள்!"
"கொள்ளை,கொலை, ஆட்கடத்தல் கொடுமையிருந் தீழத்தென்
குடியைக் காத்தாள்!"

72.

"அங்கலாய்த்த என்நெஞ்சில் அடக்கத்தைச் சாந்தியினை
அளித்தாள்!" என்பார்,
தங்கனவில் வந்துவந்து சால்ஞானம் உரைப்பதுவாய்
சாற்று கின்றார்
"வெங்களத்தில் இலங்கையிலே வெற்றிதமிழர்க்கீற்றில்
விளைப்பேன்"என்று
சிங்கவாக னிகனவில் செப்பியதாய்ச்சிலிர்த்துமனம்
செப்புகின்றார்!

**73.**

"தொழுதொவ்வோர் நாளையுமே தொடக்குகின்றஎன்னுடனே
துர்க்கை நின்று
பிழைகளிலே முற்பட்டால் பின்னின்றிழுத்தென்னைப்
பேணுகின்றாள்!"
"விழுதாம் என் பிள்ளைகளை விளங்குவித்துக்கல்வியிலே
மேன்மை தந்தாள்!"
அழுதுசிவை அடித்தொண்டர் அறைகின்றார் அன்னைஅருள்வ
அற்பு தங்கள்!

**74.**

தெல்லித்துர்க்கை ஆணையிடச் செய்தளித்தேன் திருவிரட்டை
மணிமா லைநான்!
"வெல்லாஈழ விடுதலைநீ விரைந்தருள்க! விரும்பியுன்றன்
கருணை வாழ்த்தும்
நல்லவெண்பாக் கள்பாடி நானிரண்டும் வெளியிடுவேன்"
எனவேண் டிட்டேன்!
சொல்லியநாள் கனவிலுடன் சுடர்ப்பாக்கள் தரும் வண்ணம்
கேட்டுப் பெற்றாள்!

**75.**

ஐந்துபத்து வெண்பாக்கள் ஆக்கப்போய் ஐம்பத்தொன்
றாக்கி விட்டேன்!
அந்தஇறு திப்பாட்டைஅகற்றிவிட நான்முயன்றேன்!
ஆனால், "நானே
தந்ததந்தப் பாட்டுந்தான்!தாஅதையும்!"என்பாள் போல்
தாயாம் துர்க்கைச்
சுந்தரியாள் பேனாவின் தொழிற்பாடு தடுத்தற்பு
தம்தான் செய்தாள்

# ஆற்றுப்படலம்

76. அம்பர் எனும் டொன் என்னும்
ஆறுகள்பாய் ரொறென்ரோவில்
இம்பர் உம்பரப் பேறெல்லாம்
ஈந்தமர்ந்தாள் அன்னை துர்க்கை!

77. காண்போத்துத் துர்க்கைதன்
கவின்மேனி நீராட்டிப்
பூண்டருளின் புனிதஒளி
பொலிந்தோடும் டொன்நதியே!

78. ஒன்ராறி யோக் குளத்தை
ஒயிலாய் நடந்தடையும்,
டொன்னாமிப் பேராறு
ரொறென்ரோ வடக்கிருந்து!

79. வடக்கிலிருந் திருகிளைகள்
வந்திணைந்து மேலுமொன்
றிடைப்புகுந்து துர்க்கைகைத்
திரிசூலம் எனவோடும்!

80. டொன்வலிப் பூங்காவும்
டொன்மில்ஸ் பகுதியதும்
சென்றுவக்கும் டொன்நதியின்
சிறப்புரைக்குஞ் சின்னங்கள்!

81. டொன்பெருக் கெக்கரிலே
றொறென்றோதன் துறைமுகமாம்
ஒன்றும், சில தீவுகளும்
உருக்கொண் டிலங்குவன!

82. ஆற்றோடை யாய்மாறும்
ஆழ்கணவாய் இருமருங்கும்
தோற்றியுள மென்மரக்கா,
சுந்தரப்பூங் காக்களினை!

83. புயல்வெள்ள நாட்களிலே
புனல்கடத்தும் வடிகாலாய்
நயமாகப் பயன்பட்டு
நகர்சூழ்கா தோம்பும் அவை!

84. துர்க்கேஸ் வரம்துர்க்கை
சுடர்ப்பூசைக் காம்பூக்கள்
வர்க்கம் விளைவித்து
மாண்பெய்தும் டொன்நதியும்!

85. டொன்நதிநீர் முகிலாகச்
சுடர்ந்தாவி யாய்ஏறிப்
பொன்பொலிதுர்க் கேஸ்வரம்மேல்
புனிதகுட முழுக்காட்டும்!

# நூற்பயன்

86. குடும்ப, ஊர்த் துன்பம் குறைகள் அகற்றப்
படும் இந்த நூற்படிப் பால்!

86. நெஞ்சாறத் தாயீழம் நேரம்தந் தேயனுப்பக்
கெஞ்சுவிக்கும்! நீக்கிடும் கேடு!

88. அங்கீழம் வாடெம் அபலைகள் மீட்சிக்காய்
எங்களையும் வேண்டஊக்கு மே!

89. நீதிக்காய்ப் போராடும் நெஞ்சுரம் நல்குமிது!
சாதிப்போம் பல்சா தனை!

90. பெற்று வளர்த்தின்பப் பேறெல்லாம் நல்கீழப்
பற்றெம்முள் உந்தப் படும்!

91. அங்கீழத்தன்றியன்னை ஆள்கின்றா ளிங்குமென்று
பொங்கவைக்கும் பக்திப் புனல்!

92. இம்மண் ணிளைய தலைமுறையும் எம்பண்புச்
செம்மையுணர்ந் தோங்கச் செயும்!

93. சைவச்சால் போர்ந்து, தழுவி அறநெறிகள்
உய்திபெற நல்கும் ஒளி!

94. புலத்துச் சிறார்களும் போற்றித் தமிழை
வலுப்பர் மனநிறை வால்!

95. அன்பால் பிறரை அணைத்தின் பணைகின்ற
நன்மனம்தந் தீயும் நலம்!

96. எல்லாமே நீயென் றிறைதாள் புகுவிக்கும்
வல்லமைகள் நூற்குண வாம்!

97. வெவ்வினைகள் வேரறுத்து வேட்கை தணித்தன்னை
செவ்வடிகள் சேரச் செயும்!


98. இன்னிழல் ஈசன்கால்! எய்தஎன வேபிறவி
என்பதுரை நூலும் இது!

99. இந்நூலை ஓத இலங்கும் மனச்சாந்தி!
பொன்போற் கழியும் பொழுது!

100. துக்கப் பிறவி தொடரல் தடு என்னும்
தக்கதவம் சாரத் தரும்!

101. பண்பில் விருப்பும் பழியில் வெறுப்புணர்வும்
உண்டாக்கும் ஓதுவோர்க் கோ!

மங்களம்



## இணுவைப் பண்டிதர்
# ச.வே.பஞ்சாட்சரம்

இவர் தமிழீழம் இணுவிலில் பிறந்தவர். யாழ்ப்பாணம், மலையகம், வன்னி போன்ற பல இடங்களிலும் உள்ள கல்லூரிகளில் 37 ஆண்டுகள் ஆசிரியப் பணிபுரிந்த பண்டிதப் பட்டதாரி. பன்னூறு பாவரங்குகளில் பாடிப் பாராட்டுப் பெற்ற கவிஞர். பக்திப் பிரபந்தங்கள், பாநாடகங்கள், நாவல், சிறுகதைகள், வரலாறு, இலக்கணம், சிறுவர் இலக்கியம் என 54 நூல்களை இதுவரை எழுதியவர்.

இவர் இசைப்பாடல்களை எழுதுவதில் வல்லவர். மாணிக்க விநாயகம், ஹரிஷ் ராகவேந்திரா முதலான பல இசைப்பாடகர்கள் பாடிய இசைப்பாக்கள் பலவற்றை இயற்றியவர். இலங்கைச் சாகித்திய மண்டலம், கலை இலக்கியப் பேரவை போன்ற பல சபைகளின் பத்துக்கு மேற்பட்ட பரிசுகளைப் பெற்றவர்.

பக்தி இலக்கியங்களைப் படைத்து சைவசமயத்துக்கு பெரும் தொண்டாற்றி வரும் இவர், 25 கோவில்களில் வீற்றிருக்கும் தெய்வங்களுக்கு பொன்னூஞ்சல் பாடல்களை எழுதும் பேறு பெற்றவர். தமிழ், சமய விடயங்களில் மிகுந்த அறிவு பெற்ற இவர், தமது பேச்சாற்றல் மூலம் அனைவரையும் கவர்ந்தவர். இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதன் மூலம் இலைமறைகாயாக இருக்கும் பலரின் திறமையை வெளிக் கொணர்பவர். மேலும் பல நூல்களை ஆக்கி வரும் இவர் ஈழத்துத் தமிழ் இலக்கியத்துக்கு கிடைத்ததோர் வரப்பிரசாதம்.

வெளியீடு
துர்க்கேஸ்வரம் தேவஸ்தானம்
30 Carnforth Road
Toronto, ON. M4A 2K7 Tel : 416-759 9648
www.durka.com